உ
திருச்சிற்றம்பலம்
சிவமயம்


P.T.K. தில்லைகோவிந்த செங்குந்தர்

நூற்றாண்டு விழா மலர்



நாள்
09.11.2022
புதன்கிழமை

P.T.K. தில்லைகோவிந்த செங்குந்தர்
வசந்தா தில்லைகோவிந்தன்




ஸ்ரீ தில்லைகோவிந்தராஜ பெருமாள் திருச்சித்ரகூடம். மங்களாசாசனம் பெற்ற 40-ஆம் திவ்யதேசம்



நாள் மங்கல மலர்

"நேர்மைக்கு வயது நூறு"



வாழ்வரசியார்
வசந்தா அம்மையார்

மாண்பமை தலைவர்
P.T.K. தில்லை கோவிந்த செங்குந்தர்

பதிப்பாசிரியர்
தி.பொன்னம்பலம் செங்குந்தர்

குடும்பக் கிளை வழி

பகவான் செங்குந்தர்

↓

P. தில்லைவனம் செங்குந்தர்

↓

T. குமாரசாமி செங்குந்தர் - பார்வதி அம்மாள்

↓

- K. கல்யாணி அம்மாள்
K. முருகேச செங்குந்தர்
- K. ராஜாம்மாள்
T. சபாபதி செங்குந்தர்
- K. நீலாம்மாள்
V.N. கந்தசாமி செங்குந்தர்
- PTK. தில்லை கோவிந்த செங்குந்தர்
C.T. வசந்தா

↓ (PTK. தில்லை கோவிந்த செங்குந்தர் - C.T. வசந்தா)

- ராஜ் நடராஜன் செங்குந்தர்
சாந்தி
- விஜயா
இளங்கோவன்செங்குந்தர்
- இந்திரா
விஸ்வநாதன் செங்குந்தர்
- கீதா
சிவசங்கரன் செங்குந்தர்

பதிப்புரை

உலகில் இப்போது வழங்கிவரும் மொழிகள் ஏறத்தாழ 2796 என்று மொழிநூல் அறிஞர்கள் ஒருவாறு கணக்கெடுத்திருக்கின்றனர். இன்று 7000 மொழிகட்கு மேல் இருப்பதாகக் புதிய ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இம்மொழிகள் அனைத்திலும் ஆயிரக்கணக்கில் இலக்கியங்கள் இருக்கின்றன. இவற்றில் தனிமனித வரலாறுகளைத் தொகுத்துக்கூறும் பழமையான நூல்கள் ஒன்றும் காணக்கிடைக்கவில்லை. கி.பி.7-ஆம் நூற்றாண்டில் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய திருத்தொண்டத் தொகை என்றும் சைவத் திருமுறை தான் முதன் முதலில் தனிமனித வரலாறுகளைச் சுருக்கமாகச் சுட்டிக்காட்டும் முதல் நூல் ஆகும். அதன்பின்னர் அது நம்பியாண்டார் நம்பிகள் அருளிய திருத்தொண்டர் திருவந்தாதியாகவும், தெய்வச் சேக்கிழார் அருளிய திருத்தொண்டர் புராணமாகிய பெரிய புராணமாகவும் விரிந்தது. காலம் செல்லச் செல்ல வரலாற்றுச் செய்திக்ளை நூலாகச் செய்வதில் தமிழனின் ஆர்வம் குறைந்து விட்டது என்று சொல்லலாம். மேலும் தமிழர்களின் அக்கறை இன்மையால் பன்னூறு நூல்கள் ஆடிப்பெருக்கு ஆற்றிலும், போகிப் பண்டிகை நெருப்பிலும் மறைந்து போயின. இந்நிலை மாறவேண்டும். நம் முன்னோர்களின் மதிப்புமிக்க பெருமித வாழ்வு வரலாறாகப் பதிவு பெற வேண்டும். இக்காலத்தில் நம்மோடு வாழ்ந்திருந்த மேன்மக்களின் வாழ்வியல் அனுபவங்கள் எதிர்காலச் சந்ததியினருக்கு வழிகாட்டும் என்பதைக் கருத்தில் கொண்டு அதனை பதிவு செய்தல் நம்மனோரின் கடமையாகும்.

திருமிகு ப.தி.கு. தில்லை கோவிந்த செங்குந்தர் சிதம்பரம் தென்பகுதி செங்குந்தர் மரபினரின் நாட்டாண்மைத் தலைவர். சமூகப் பொறுப்புமிக்க ஆன்மீகச் செல்வர். நேர்மையின் நாயகம். அவர்தம் பெருமைமிகு வரலாற்றை அடுத்த தலைமுறையினருக்குக் கொண்டு சேர்க்க வேண்டும் என்பது இன்றியமையாத நற்பணியாகும்.

திருமிகு. தில்லைராஜ் நடராஜன் செங்குந்தர் அவர்கள் தம் தந்தையாரின் நூற்றாண்டு நாள்மங்கல விழா நிகழ்த்தும்போது சிறப்பு மலர் வெளியிட இணைத்துக் கொண்டனர் சிதம்பரம் செங்குந்தர் இளைஞர் சங்கத்தினர் வேண்டும் என்று விரும்பினேன். ஆர்வமுடன் தம்மை இணைத்துக்கொண்டனர். அந்நூலில் தில்லைச் சிதம்பரம் குறித்துப் பலரும் அறிந்திராத செய்திகள் இடம்பெற வேண்டும் என்றும், சமூக சமய, மொழி பண்பாடு குறித்த அரிய செய்திகள் இடம் பெற

வேண்டும் என்றும் திரு.தில்லை ராஜ் நடராஜன் செங்குந்தர் அவர்கள் பரிந்துரைத்தார்கள். அவற்றையெல்லாம் தொகுத்துச் சீர் தூக்கி பற்பல நல்ல கருத்துக்களை இந்நூலில் இடம் பெறச் செய்துள்ளோம்.

சமூகம், சமயம், பண்பாடு இவற்றோடு பின்னிப் பிணைந்துள்ள பொது வாழ்வு தெய்வத்திருவாளர் ப.தி.கு. தில்லை கோவிந்த செங்குந்தர் அவர்களின் பெருமித வாழ்வாகையால் அவர்தம் வரலாற்றை இந்நூலின் கண் "நேர்மைக்கு வயது நூறு" என்ற தலைப்பில் இணைத்துள்ளோம். குடந்தைக் கவிஞர் திருமிகு அ.கண்ணப்பனார் இயற்றியருளிய தோத்திரச் சொல்மாலை நூலில் முருகப் பெருமான் எழுந்தருள்புரிகின்ற திருத்தலங்களைத் தொகுத்துக்கூறும் ஊர்த்தொகை இடம் பெற்றுள்ளது. அதன் சிறப்பு கருதி அஃது இம்மலரில் இடம் பெற்றுள்ளது.செங்குந்தர் குலகுரு அருள்மொழியரசு, திருப்புகழ் ஜோதி, திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் அவ்வப்போது எழுதியும், சொற்பொழிவு செய்தும் கூறிய சமூக சமயப் பண்பாட்டுக் கருவூலங்கள் இதன்கண் இடம்பெற்றுள்ளன. தெய்வத்திரு. P.T.K.T. அவர்களின் வாழ்க்கைப் பயண ஒளிப்படங்களும் இந்நூலுக்கு அழகு சேர்க்கின்றன.

இந்நூல் செம்மையுற ஆக்கமும் ஊக்கமும் நல்கிய நாட்டாண்மைத் தலைவர் திருமிகு தில்லை ராஜ் நடராஜன் செங்குந்தர் அவர்கட்கும், அவ்வப் போது கருத்துகள் கூறி வகைப்பாடு செய்து பதிப்பிற்கு உதவிய திருமிகு.சிவநெறிச்சுடர் தி. பொன்னம்பலம் செங்குந்தர், திருமிகு. சி.பி.கே. ஸ்ரீதரன் செங்குந்தர், திருமிகு. இர. நடராஜன் செங்குந்தர்,திரு.ரமேஷ் செங்குந்தர் ஆகியோருக்கும், மிக்க ஆர்வத்தோடும் அக்கறையோடும் உரிய நேரத்தில் செப்பமுற அச்சியற்றித் தந்த சிதம்பரம் ஜனகம் அச்சகத்தாருக்கும், கவிஞர். அ. கண்ணப்பனார் அவர்கட்கும், குக ஸ்ரீ வாரியார் பதிப்பகத்தாருக்கும், சிதம்பரம் செங்குந்தர் மரபினருக்கும் என்றும் நன்றியுடையோம். இந்நூல் நன்கினிது அமையத் திருவருள்பாலிக்கும் சிவகாமியம்மையுடனாகிய சிற்றம்பலத்துச் செல்லப் பெருமான் திருவருளுக்கும், குமரகோட்டத்து ஸ்ரீ செல்வமுத்து குமரப் பெருமானின் வற்றாத கருணைக்கும் என்றென்றும் போற்றி வணக்கம் செய்து உவக்கின்றோம்.

ஆன்மீகத் தமிழுலகம் இதனைப் போற்றிப் பயன் கொள்ள அன்புடன் வேண்டுகின்றோம்.

இங்ஙனம்

சி.சிவசங்கரன் செங்குந்தர்

புரவலர், சிதம்பரம் செங்குந்தர் இளைஞர் சாங்கம் &


செங்குந்தர் இளைஞர் சங்கம், சிதம்பரம்

சிதம்பரம்

17.10.2022



சிவத்திரு. ப. தி. குமாரசாமி செங்குந்தர்




மனைக்கு விளக்கமாகிய


சிவத்திருமதி கு. பார்வதி அம்மையார்



அன்பு சகோதரிகளுடன் P.T.K.T




காசிப்பதியில் இல்லத்தரசியாருடன்
ஆதியை வணங்குதல்



ராஜ் நடராஜன் – சாந்தி
திருமணவிழாவில்



விஜயா – இளங்கோவன்
திருமணவிழாவில்



இந்திரா – விசுவநாதன்
திருமணவிழாவில்



கீதா – சிவசங்கரன்
திருமணவிழாவில்



கார்த்திக் வில்லா புதுமனை புகுவிழா 1990



தில்லை ராஜ் நடராஜன் வணிக வளாகம் திறப்பு விழா

நேர்மைக்கு வயது நூறு

-தி. பொன்னம்பலம் செங்குந்தர்

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவனாகிய அழகிய சிற்றம்பலவன், ஐந்தொழில் வித்தகத்திருக்கூத்தராகிய அலகிலா விளையாட்டுடையவனாய் அருள்பாலிக்கும் திருத்தலம் சிதம்பரம். உலக நடுவாகிய இத்தலம் தில்லை மூதூர் என திருவாசகத்தில் போற்றப்பெறுகிறது.

வடக்கே சுவேத நதி எனப்பெறும் வெள்ளாறும் தெற்கே கொள்ளிடமும், மேற்கே வீர நாராயணைப் பேரேரியும் கிழக்கே திருவேட்கள நன்னகரில் விளங்கும் தண்ணார் தமிழ் வளர்க்கும் அண்ணாமலைப் பல்கலைக் கழகமும். இன்று வங்கக் கடல் என்றழைக்கப்பெறும் சோழ மண்டலக் கடற்கரையும் அணிசெய்ய, இந்த நான்கு எல்லைக்குள் உட்பட்டு விளங்கும் தெய்வத் திரு நகரம் சிதம்பரம். எங்கும் திருமேனி எங்கும் சிவசக்தி எங்கும் சிதம்பரம் எங்கும் திரு நட்டம் என்று இந்தப் பேருலகையே சிதம்பரம் என்று கூறுவார் திருமூலர். சோழர்காலத்தில் இவ்வூர் எல்லார்க்கும் நன்கு அறிமுகமான ஊராகவும், தன்னாட்சி பெற்று விளங்கிய தனியூராகவும் இருந்திருக்கிறது. ஒரு நாடு ஆற்ற வேண்டிய நலத்திட்டப் பணிகளையெல்லாம் ஊர்ச்சபையே மேற்கொண்டு நடத்துவதற்கு அதிகாரம் அளிக்கப் பெற்ற ஊர்களைத் தனியூர் என்றும் தன் கறு என்றும் கல்வெட்டுகள் குறிக்கின்றன.

சிதம்பரம் சோழப் பேரரசின் ஆட்சிக்கு உட்பட்ட பகுதியாக இருந்தாலும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட தன்னாட்சி அதிகாரம் பெற்று விளங்கியது தில்லைச் சிதம்பரம். தொண்டினாற் சிறந்த மக்கள் வாழ்கின்ற தில்லைத் திரு நகரை மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் " பூ மா தங்கு மடம் கல்விச் சாலை ஆர்

தில்லை'' எனப் பாடியுள்ளார். கல்வி வளமும் செல்வ வளமும் நிறைந்த சிதம்பரத்தை '' ஊறும் இன்தமிழால் உயர்ந்தோர் உறை தில்லை'' என்று திருஞான சம்பந்தர் போற்றுகின்றார்.

சிதம்பரத்தின் இயற்கை வளத்தைத் திருமுறைகள் பாடிப் புகழ்கின்றன.

பாளையுடைக் கமுகோங்கிப்
பன்மாடம் நெருங்கி யெங்கும்
வாளையுடைப் புனல் வந்தெறி
வாழ் வயல் தில்லை
வரம் பிரி வாளை மிளிர் மடுக் கமலம்
கரும்பொடு மாந்திடு மேதி
பிரம்பிரி செந்நெல் கழனிச் செங்கழுநீர்ப்
பழனம் சூழ் பெரும் பற்றப் புலியூர்
சிறை கொள்நீர்த் தரள்த் திரைகொள் நித்திலத்த
செம்மை சிற்றம்பலக் கூத்தா
" தென்னா என்று வண்டு பாடும் தில்லை"
" கனைத் திழியும் கழனிக் கனகம்
கதிர் ஓண் பவளம்
சினத்தொடு வந்தெறியும் தில்லை"
" தேனல் வரி வண்டறையும் தில்லை"
" செந்நெல் விளை கழனித் தில்லை"
" சந்தும் அகிலும் தழைப் பீலிகளும்
சாதி பலவும் கொண்ட
உந்தி இழியும் நிவவின் கரைமேல்

உயர்ந்த மதில் தில்லை"

" குரவம் கோங்கும் குளிர் புன்னை"

" கைதை குவிந்த கரைகள் மேல்

திரை வந்துலவும் தில்லை

குரு நாண் மலர்ப் பொழில் சூழ் தில்லை

சிறை வான் புனல் தில்லை

பூஞ்சுனையார் புனல் தென் புலியூர்

கைவரும் பழனம் குழைத்த செஞ்சாலிக்

கடை சியர் களை தரு நீலம்

செய்வரம்பு அரும்பும் பெரும்பற்றப்புலியூர்

நிறைவெண் கொடி மாட நெற்றி நேர் தீண்டப்

பிறைவந்திரை தாக்கும் பேரம்பலம் தில்லை

செய்ஞ்சின்ற நீல மலர்கின்ற தில்லை

என்றெல்லாம் போற்றப் பெறும் சிதம்பரம் இயற்கை எழில் நலம் கொஞ்சும் வளம் நிறைந்த நற்பதியாகும்.

சோழர்களின் குலதெய்வமாகிய நடராசப் பெருமான் ஆடியருள் புரிவதால் இஃது பூலோக கயிலாயம் என் பெற்றது. இத்தலத்தைச் செம்மை செய்வதற்காகவே இரண்டாம் குலோத்துங்க சோழன் திருமுடி சூடிக் கொண்டான் என்பர். இதனை தில்லை திருநகரம் சிறப்புடையதாகத் திருமுடி சூடிய பெம்மான் என்று செப்பேடுகள் செப்புகின்றன.

தில்லைச் சிதம்பரத்தில் தொன்று தொட்டு புகழோங்கிய நற்குடியாகிய செங்குந்தர் மரபினர் வாழ்வாங்கு வாழ்ந்து வருகின்றனர். குமரப் பெருமானின் தம்பியர்களாம் தேவனோபதிக் கடவுளின் படைத் தலைமை வீரர்களாய், விளங்குகின்ற செங்குந்த முதலியார் மரபினர் பிற்காலச் சோழர்களின் நம்பிக்கைக்கு உரிய

மெய்க் காவலர்களாய் விளங்கினர். படைத் தலைமையேற்று நாட்டின் மானங் காக்கும் இம்மரபினர் நெசவு செய்துது ஆடை நெய்து கொடுத்து மனித குலத்தின் மானங்காக்கும் மாண்பினரகவும் விளங்கினர்.

பாஞ்சாலி ஒருத்திக்குத் துகில் கொடுத்தான் வைகுந்தன்

பாரிலுள்ளோர் அனைவர்க்கும் துகில் கொடுத்தான் செங்குந்தன்.

என்ற கண்ணதாசனின் கனிக்கவிதை இங்கு நினையத்தக்கது.

திருவாரூர் முசுகுந்தச் சக்கரவர்த்தி வீரபாகு தேவரின் மகளை மணம்புரிந்து கொண்டார் ஆதலின் தேவ மரபும் இணைந்த மரபாகி செங்குந்த கைக்கோளர் மரபு விளங்குகின்றது.

கைகோள் என்ற சொல்லுக்கு உயர்ந்த கொள்கைகளை விடாப்பிடியாகக் பின்பற்றுதல் எத்தனை இடர்பாடுகள் வந்தாலும் சிறந்த கொள்கையில் பற்றுறுதியுடன் இருத்தல் என்பது பொருள். மனித குலத்துக்கு நலம் பயக்கும் நற்கொள்கையினை விடாது பின்பற்றுவர் கைக்கோளர் என்பார் பேராசிரியர் முனைவர் சோ.ந.கந்தசாமி அவர்கள். நம்பிக்கைக்கு உரிய மெய்க் காவலர்களாகிய இவர்களை வாள்பெற்ற கைக்கோளர் என்றும் இவர்களின் படைத்தொகுதியை தெரிஞ்ச கைக்கோளப்படை என்றும் கல்வெட்டுகள் குறிக்கின்றன. செங்குந்தர் கைக்கோளர் என்ற இரண்டு சொற்களும் ஒரு மரபினரைக் குறிப்பனவே.

புகழ் வாய்ந்த இம்மரபின் பகவான் முதலியார் எனும் சிவ நெறிச்சீலர் வாழ்ந்து வந்தார். சிதம்பரத்தில் இவர் பெயரால் பகவான் முதலியார் தெரு என்று ஒரு தெருவே உள்ளது இன்று அது மருவி பாவா முதலியார் தெரு என்று வழங்குகின்றது.

பகவான் முதலியார் பரம்பரையாக செங்குந்த மரபினரின் நாட்டாண்மைத் தலைவராகவும் தில்லைப் பெருங்கோயிலில்

கொடியேற்றம் கந்த சஷ்டி முதலிய உற்சவங்களை நிகழ்த்தும் பெருஞ்செல்வராகவும் மன வளம் மிக்க நனிநாகரிகராகவும் விளங்கினார்கள். வழி வழி சிறக்கும் இத்தலைமைக் குடும்பத்தில் சிவத்திரு தி.குமாரசாமி செங்குந்தர் நெசவு வேளாண்மை என இரு தொழில்களையும் செய்து வந்தார்கள். மனையறங்காக்கும் மாண்பினராகிய பார்வதி அம்மையை மணந்து வாழ்வாங்கு வாழ்ந்திருந்தனர். இவர்களின் இல்லறப் பயனாய் கல்யாணி அம்மையார், ராஜாம்பாள் அம்மையார், நீலாம்பாள் அம்மையார் என மூன்று பெண்கள் பிறந்தனர். நான்காவதாகப் பிறந்தவர் ப.தி.கு. தில்லை கோவிந்த செங்குந்தர். செங்குந்தர் குலம் பொலியவும் மிகுசைவத்துறை விளங்கவும் மனித நேயம் மாண்புறவும் இவரை சிற்றம்பலத்து செல்வபெருமான் பிறக்கச் செய்தார் என்றால் அஃது மிகையன்று. 05.11.1922 இல் தோன்றிய இவருக்கு இவ்வாண்டு நூற்றாண்டு மங்கல விழா கொண்டாடப் பெறுகின்றது.

ப.தி.கு.தில்லை கோவிந்தர் பள்ளிப் பருவத்திலேயே தம் தந்தையை இழந்தார். இவர்தம் மூத்த சகோதரியின் கணவர் முருகேச செங்குந்தர் இவருக்குப் பாதுகாவராக இருந்து குடும்பப் பொறுப்புகளையும் செவ்வனே நிறைவேற்றினார். தில்லை கோவிந்தர் இளமையிலேயே பண்பாடும், பக்தியும், ஒழுக்கமும், சான்றாண்மையும், ஆளுமைப்பண்பும் உடையவராய் விளங்கினார். பச்சையப்பன் பள்ளியில் பெரும்பள்ளி இறுதி வகுப்பு வரை படித்தார். குடும்பப் பொறுப்புகள் சுமையாக அழுத்தியமையால் மேல் படிப்புக்குச் செல்ல இயலாநிலை ஏற்பட்டது. எனினும் மனம் சுணங்காமல் ஸ்ரீ நடராஜா டெக்ஸ்டைல்ஸ் என்றும் ஜவுளி நிறுவனத்தைத் தொடங்கி நடத்தினார். வணிகத்தில் வெற்றியும் பெற்றார். அத்தோடு அமையாமல் தில்லையின் தெற்கு வடக்கு பகுதிகளில் (பூலாமேடு, செட்டி மேடு, கொத்தங்குடி) இருந்த தம் வயல்களில் வேளாண்மை

செய்து பாரத நாட்டின் முதுகெலும்பாகிய விவசாயத்திலும் சாதனை படைத்தார். பாரி & கோ உர நிறுவனத்தின் டிஸ்ட்ரிப்யூட்டர் என்ற நிலையில் சிறந்த முகவாண்மையாளராகவும் விளங்கினார். “உழைக்கும் பொழுது உன்னையே அன்னையே என்பன் ஓடி வந்தே” என்ற வாசகத்துக்கு ஏற்பவும் இரைதேடுவதோடு இறையுந்தேடு என்ற திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் அருளுரைக்கு ஏற்பவும் செங்குந்தர் குலத்தையும் சிவ நெறியையும் புரக்கும் கொள்கையில் தளராது தலை நின்றார்.

சென்னை இராயப்பேட்டை திருவாளர் திருமிகு அய்யாசாமி செங்குந்தர் அவர்களின் தவப்புதல்வியார் வசந்தா அம்மையார். இவர் மனைத்தக்க மாண்புடைய இல்லறவிளக்கு தற்காத்துத் தற்கொண்டாற் பேணும் தகைமை மிக்கவர். செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருக்கும் மனை மாட்சியுடைவர் இவர் பெண்ணிற்பெருந்தக்க வசந்தா அம்மையாரை 22.06.1945-ல் நன்மணம் புரிந்து கொண்டார். சிவகாமியம்மை உடனாகிய சிற்றம்பலத்துச் செல்வப்பெருமான் திருவருளால் இவர்களது மனையறம் சிறப்புற நிகழ்ந்தது.

இன்று எஸ்.ஆர்.நகர் இருக்கும் இடம் அந்நாளில் பெரிய தோட்டம் என வழங்கப்பட்டது. சிறிய குளம், கோயில், தென்னை, மா, ஈச்சை, வேங்கை, கொன்றை, வேம்பு என மரங்களாலும் மரஞ்செடி கொடிகள் நிறைந்த பூஞ்சோலைகளாலும் பெரிய தோட்டம் வளம் நிறைந்த பூமியாக விளங்கிற்று. இது. ப.தி.கு. அவர்களின் பாரம்பரியமான குடும்பச் சொத்து. மனவளம் மிக்க ப.தி.கு.தில்லை கோவிந்தர் அவர்கள் இதனை செங்குந்த மரபினரின் பொதுச் சொத்தாக அறிவித்து அதன் வருவாயிலிருந்து கந்த சஷ்டி ஆனி மாத கொடியேற்ற உற்சவம், கார்த்திகை தீப கம்ப விளக்கு முதலிய உற்சவங்களைச் சிறப்புறச் செய்து வந்தார்.

நாட்டாண்மைத் தலைவர் என்ற பொறுப்பில் இருந்தமையால் செங்குந்த மரபினரின் தவுறி, கடை, நிலம் இவற்றிற்கு ஏற்ப மிகச் சொற்பமான தொகையை அவர்களின் பங்களிப்பாக ஏற்க வேண்டியிருந்தது. அதனையும் சேர்த்து இவ்விழாக்களை ஈடுபாட்டோடு நன்கினிது நடத்தி வந்தார். கந்த சஷ்டியின் போது செங்குந்த நவ வீரர்கள் பகவான் முதலியார் தெரு நாட்டாண்மைத் தலைவரின் இல்லத்திலிருந்து ஊர்வலமாகப் புறப்படும் அழகே அழகு. குழலொலி, யாழொலி கூத்தொலி ஏத்தொலி எங்கும் நிறைத்திலங்க வெண்சாமரை, நடைபாவாடை, பகல் தீவர்த்தி, முக்குடை, சுருட்டி, தோரணம் என விழாப் பொலிவால் தில்லை நகரமே மங்கலமாய் பொலியும். மேல்நாடு கீழ்நாடு தென்னாடு வடநாடு எங்கிந்த செங்குந்தமே என்று முழுங்குவது இன்றும் என் செவிகளில் எதிரொலித்து இறும்பூது கொள்ளச்செய்கின்றது.

மங்கலம் என்ப மனைமாட்சி மற்று அதன் நன்கலம் நன்மக்கள்பேறு எனும் வள்ளுவர் வாய்மொழிக்கு ஏற்ப மனையறப்பயனாய்,

தில்லை ராஜ் நடராஜன், விஜயா, இந்திரா, கீதா என நன்மக்கள் பிறந்தனர்.

திருவாளர் தில்லை ராஜ்நடராஜன் செங்குந்தர் அவர்கள் பொறியியல் கற்ற நெறியாளர். அத்துறையில் முனைவர் (டாக்டர்) பட்டம் பெற்றவர். அமெரிக்க நாட்டில் டெக்ஸாஸ் மாகாணத்தில் டல்லஸ் என்ற ஊரில் பணிபுரியும் சிறந்தவர். கல்வியிற் சிறந்த காஞ்சி மாநகரில் வாழ்ந்து வரும் சிவத்திரு. மு.சுவாமிவேலு-சகுந்தலா தம்பதியினரின் செல்வமகள் குடும்ப விளக்கு சாந்தி பி.ஏ அவர்களை இவர்கட்கு மணமுடித்து வைத்தார்கள்.

திரு. எம்.இளங்கோவன் திருமதி விஜயா இளங்கோவன் திரு. பி.என்.விசுவநாதன் திருமதி இந்திரா விசுவநாதன் திரு.எஸ். சிவசங்கரன். திருமதி கீதா சிவசங்கரன் என பொலியும் நலந்திகழ் குடும்பம் நாளும் செல்வமுத்துகுமரப் பெருமான் திருவருளால் நலமோங்கிப் பொலிகின்றது. கார்த்திக், தேவி, மாலதி, வானதி, சிவகாம சுந்தரி, சிங்கார வேலன், நாராயண் சங்கர், சாய்ப்பீரித்தி என்னும் பெயரக் குழந்தைகள் நிறைந்து வழி வழி பொலியும் நிறைவாழ்வாக இவர் வாழ்வு அமைந்தது.

சிதம்பரம் தென்பகுதி செங்குந்த மரபினரின் நாட்டாண்மைத் தலைவராகவும், அறங்காவலராகவும் விளங்கிய ப.தி.கு தில்லை கோவிந்த செங்குந்தர் அவர்கள் பொது வாழ்வின் தூய்மைத் திலகமாக, நேர்மை நாயகமாக விளங்கினார்கள்.

தில்லை நடராஜப் பெருமான் திருக்கோயிலில் ஆனித் திருமஞ்சன உற்சவத்தின் முதல் நாளான கொடியேற்ற உற்சவத்தை சிறப்புற நிகழ்த்திவந்தார்கள்.

இடப வடிவத்தை ஒரு கொடிச் சீலையில் எழுதி வழிபாடு ஆற்றி அதனைக் கொடி மரத்தின் உச்சியில் ஏற்றுவது கொடியேற்று விழாவாகும். தத்துவங்கள் தோன்றும் முறையினை இக்கொடியேற்று விழா விளக்கி நிற்கிறது. கொடிச் சீலையில் எழுதப் பெற்றுள்ள ஆனேறு (ரிஷபம்) உயிரையும் தர்மத்தையும் குறிக்கும். இந்த இரண்டும் உயர்ந்தோங்கி விளங்க வேண்டும் என்பது கொடியேற்று உற்சவத்தின் உண்மை விளக்கமாகும். ஆயிரம் ஆண்டுகட்குமுன் கொடிக்கவி பாடிய உமாபதி சிவனாரால் சோழ மன்னரின் ஆணைப்படி சகல சிவாலயங்களிலும் கொடி யேற்றும் உரிமை செங்குந்த மரபினர்களுக்குப் பட்டயம் செய்தளிக்கப் பெற்றது என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

வேதத்தோன் முதலாகிய தேவர்கள் பூசித்தே தொழ, வாழ்புலியூரினில் மேலைக் கோடிபுரவாசலின் மேவிய

செல்வமுத்துக் குமர பெருமான் கந்த சஷ்டி சூரசம்ஹார உற்சவம் வேழ மங்கை வேட மங்கை உடனாகிய வேலவர் திருக்கல்யாண உற்சவம் ஆகியவற்றையும் தொடர்ந்து மிகுந்த ஊக்கத்தோடு இவர்கள் நிகழ்த்தினார்கள்.

பரஞான தீப விளக்கம் காண்பதற்கு ஏதுவாக கார்த்திகை தீபத்திருநாளன்று ஸ்ரீநடராஜர் சன்னதியில் திருக்கம்ப விளக்கு உற்சவத்தையும் மிகச் சிறப்பாக நடத்தினார்கள்.

நமது செங்குந்தர் பரம்பரையின் வாழையடி வாழையென வந்த மரபின்படி திரு. ப. தி.கு. தில்லை கோவிந்த செங்குந்தர் அவர்கள் தம் திருமகனார் நிறைசெல்வர் தில்லை ராஜ் நடராஜன் செங்குந்தர் அவர்கட்கு செங்குந்தர் நாட்டாண்மையின் இளவரசர் பட்டம் சூட்டி மகிழ்ந்தார்கள். துந்துபி வருடம் கார்த்திகை மாதம் 6 ஆம் நாள் (22.11.1982) திங்கட்கிழமை ஸ்ரீநடராஜர்சன்னதியில் பஞ்சாட்சரத்திருக்களிற்றுபடியில் திரு. ராஜ் நடராஜன் செங்குந்தர் அவர்களை அமர்த்தி தில்லை வாழ் அந்தணர்கள் சங்காபிஷேகம் செய்வித்து இளவரசுப் பட்டம் சூட்டிய நிகழ்வு எம்மனோர் வாழ்வில் மறக்க இயலா மங்கல நிகழ்வாகும்.

1987 இல் குமரக் கோயில் திருக்குடமுழுக்கு விழாவினைச் செங்குந்த மரபினர் சார்பாக இவர் செய்வித்ததும் போற்றத்தக்கதாகும். இதனை 1987 ஆம் ஆண்டு கும்பாபிஷேக மலரில் உள்ள இயன்மொழி வாழ்த்து

"மேலைக் கோபுர மருகில் வீற்றிருக்கும்

குமர கோட்டக் குடமுழுக்கைக்

கோலமுடன் செய்திட்ட செங்குந்த மரபினர்கள் குலவி வாழ்க எனப் பாராட்டுகிறது.

1987க்கு பின் குமரகோட்டக் கோயிலை புதுப்பித்து வண்ணமயமாக்கி எழில் பெருகத் திருப்பணி செய்து தில்லை கோவிந்த செங்குந்தர் அவர்களின் மைந்தர் சிவத்திரு. தில்லை ராஜ் நடராஜன் செங்குந்தர் அவர்கள் புகழ்வாய்ந்த புனிதம் நிறைந்த குட முழுக்கை நிகழ்த்தினார்கள் என்பது இவண் எண்ணத்தக்கது. தந்தையார் நிகழ்த்திய அறப் பணிகளை அவர்தம் வழியில் நின்று தொடர்ந்து ஆற்றிவரும் டாக்டர். தில்லை ராஜ் நடராஜன் செங்குந்தர் அவர்களின் பணி பெரிதும் பாராட்டுக்குரியதாகும். இவர் மேலும் குமரகோட்ட யாகசாலை மண்டபத்தைப் புதிதாக நிர்மாணித்து அர்ப்பணித்துள்ளார்கள். விளம்பி ஆண்டு தை மாதம் 28-ஆம் நாள் (11.02.2019) திங்கள் கிழமை குமர கோட்டத்துக்கு மீண்டும் ஒரு குட முழுக்கை நிகழ்த்தி மகிழ்ந்தார்கள். ராஜேந்திர சோழன் வென்றெடுத்த வெற்றி புகழ் அவன் தந்தை சிவபாத சேகரன் ராஜ ராஜன் பெற்ற வெற்றியாக வரலாற்றில் சொல்லப் பெறுகிறது. அதுபோல தில்லை ராஜ் நடராஜன் செங்குந்தர் அவர்களின் பணிகள் "இவன் தந்தை என் நோற்றான் கொல்" எனச் சொல்லும் படியாக அமைந்துள்ளது.

தெற்குத் தெரு செங்குந்த மரபினருக்கிடையே பிளவு ஏற்பட்டு சிலர் நாட்டாண்மை தலைவர் PTKT அவர்கட்டு எதிராக ஒரு அமைப்பை ஏற்படுத்தினர்.

பெரிய தோட்டத்தின் வருவாய் அளப்பரிய கோயிற் பணிகளைச் செய்வதற்கு போது மானதாக இல்லை. எனவே அதனை விற்று கிடைக்கும் பணத்தை அரசு வங்கியில் டெபாஸிட் செய்து வட்டி பணத்திலிருந்து உற்சவங்களையும் திருப்பணிகளையும் செய்யலாம் என செங்குந்தர் பொதுவில் தீர்மானிக்கப்பட்டது. புதிதாக அமைப்பை ஏற்படுத்தி தர்க்கமிடுவோரும் இதற்கு ஒப்புதல் அளித்திருந்தனர். எனினும் தனிப்பட்ட மன வேறுபாடு காரணமாக நிர்வாகம் குறித்து சிலர் வழக்கு தொடுத்தனர். சிதம்பரம் ஸ்ரீ செல்லியம்மன் கோயிலில்

ஆக்கூர் அண்ணலார் தலைமையில் கூடிய சமாதானக் கூட்டம் முடிவு எடுக்க முடியாமல் கலைந்தது. வழக்கின் முடிவில் நீதிமன்றத் தீர்ப்பு திரு. PTKT அவர்கட்குச் சாதகமாக வழங்கப்பட்டது. பின்னர் பிரிந்தவர் கூடினர். அனைவரையும் நேர்மையின் சிகரமாகிய PTKTஅவர்கள் ஆர்வ மனத்துடன் வரவேற்று செங்குந்தர் சமுதாயத்தை ஒருங்கிணைத்தார். எல்லாம் குமரப் பெருமானின் திருவருளே எனச்சிந்தித்து வந்தித்தார். திருவாளர்கள். எஸ். கிருஷ்ணமூர்த்தி செங்குந்தர் ப. துரைக்கண்ணு செங்குந்தர், வக்கீல் குமாஸ்தா சுப்பிரமணிய செங்குந்தர் திருமுறை ஆ.இரத்தினசபாபதி செங்குந்தர்,கு.சண்முகம்,செங்குந்தர் தொண்டு பணியாளர் சி.பி.கே.ஸ்ரீதரன்செங்குந்தர், பி.டி. ஆறுமுகம் செங்குந்தர், எஸ்.சிவசங்கரன் செங்குந்தர், பி.டி குஞ்சிதபாதம் செங்குந்தர், இளைஞர் சங்கத்தின் செயலர் கே. எஸ். நடராஜன் செங்குந்தர், சி.குப்புசாமி செங்குந்தர், கோயில் பொது மனிதர் பச்சையப்ப முதலியார், செங்கட்டான்தெரு ராஜவேல் செங்குந்தர், ஜவுளி வணிகர் கனகசபை செங்குந்தர், அழகானந்த முதலியார் சத்திரம் இராஜமாணிக்கம் செங்குந்தர் குடும்பத்தினர், கடலை வணிகம் தில்லை சிதம்பரம் செங்குந்தர் குடும்பத்தினர் மற்றும் சமுதாய ஒற்றுமைப் பணியில் தலைநின்ற வாணி பார்மஸி கு.பழனிவேல் செங்குந்தர், ஜோதி லெட்சுமி விலாஸ் வீரப்ப செங்குந்தர், திருவம்பலம் செங்குந்தர் எஸ்.செல்வராஜ் செங்குந்தர் என அனைவரையும் ஒருங்கிணைத்து சிறப்பு செய்து செங்குந்தர் சமூகத்தை தலை நிமிரச் செய்தார். வழக்கின் போது அரிய ஆவணங்களைத் தந்து உதவியதோடு வழக்கு மன்றத்திலும் கோயில் பொதுவார் கூட்டத்திலும் எடுத்துரைத்து ஒத்துழைத்த பிரம்ப ஸ்ரீ ஞா.ர. வேம்பு தீக்ஷிதர் எனும் எஞ்கேஸ்வரதீக்ஷிதர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துப் பாராட்டினார்.

சிவத்திரு. ப.தி.கு. தில்லை கோவிந்த செங்குந்தர் வாழ்வரசியார் திருமதி. சி.டி. வசந்தா அம்மையார் அவர்களின் மணமங்கலப் பொன்விழா 23.6.1995 வெள்ளிக்கிழமை சிதம்பரத்தில் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. தென்பகுதி வட பகுதி செங்குந்தர்கள் மட்டுமன்றி தில்லையின் சிறப்புமிக்க வணிகர்களும், அரசியல் பிரமுகர்களும் ஆன்மீக அன்பர்களும் பொது மக்களும் இவ்விழாவில் பெருமளவில் கலந்து கொண்டு மகிழ்ந்தனர். சிதம்பரம் செங்குந்தர் இளைஞர் சங்கம் மணமங்கலப் பொன்விழா மலரை பதிப்பித்து வெளியிட்டுப் மகிழ்ந்தது.

செங்குந்தர் தலைவராகவும் தலை சிறந்த வணிகராகவும் வேளாண்மையில் வென்றெடுத்த வித்தகராகவும் ஆன்மீக அருட்பணிச் செல்வராகவும் இன்னார் இனியார் என்ற வேறுபாடியின்றி நேர்மைத் தரசாக இருந்து அனைவரையும் அரவணைத்த சமூகப் பொறுப்பாளராகவும், கந்தசஷ்டிப் பெருவிழாவில் பெரிய அரங்கு அமைத்து இயல், இசை, நாட்டிய நிகழ்வுகளை நிகழ்த்திய முத்தமிழ்ச் செல்வராகவும், பொது வாழ்வின் நேர்மையின் நாயகராகவும், இல்லறக் கடமைகளை இனிதே நிறைவேற்றிய குடும்பத் தலைவராகவும், சுற்றம் போற்றிச் சூழ்ந்திருக்கும் ஒப்புரவாளராகவும் இவர் விளங்கினார். இவர்தம் மேன்மைக்கு மேலும் பெருமை சேர்க்கும் வகையில் இவர்தம் மைந்தர் டாக்டர். தில்லை ராஜ் நடராஜன் செங்குந்தர் அவர்கள் தில்லைக்கூத்தன் திருவருளால் அரும்பணிகளை ஆரவாரமின்றிச் செய்து வருகின்றார். தாம் ஈட்டிய செல்வத்தின் பெரும்பகுதியை நற்பணிகள் பலவற்றிற்கு ஈந்து மகிழ்கின்றார். ஸ்ரீ சாய்பாபா வழிபாட்டுக்கென வீரபத்ர சாமி கோயில் தெருவில் ஒரு வீட்டு மனையை வழங்கியுள்ளார். அங்கே வழிபாட்டுக் கூடத்தையும் கட்டி தந்துள்ளார். காஞ்சிபுரத்தில் தம் மைத்துனர்கள்

திரு.ஜெயராஜ் திரு.மூர்த்தி அவர்களின் வீட்டின்அருகில் அமைந்தசொந்தமனையில்ஸ்ரீ சாய்பாபாவிற்கு கோயில் எடுப்பித்தார்கள்.

பொறியியல் வல்லுநராகிய இவர் சத்தமின்றி பல சாதனைகளைச் செய்து வருகிறார்.

முன்பு கருப்பு வெள்ளை தொலைக்காட்சியாக இருந்ததை இன்று வண்ணமிகு டிஜிடல் கலர் டிவியாக நாம் அனுபவித்து வருகிறோமே இந்த சாதனைக்குயார் சொந்த காரர் என்பதை நாம் எண்ணி பார்த்ததுண்டா?

மலர்தலை யுலகத்து மக்கள் மகிழ்ந்திட தொலைகாட்சி வழியாக தோன்றிடும் வண்ணம் அறிவியல் டிஜிடல் ஃபார்மூலா கண்டவர் இவரல்லவோ!

தம்முடைய தந்தையார் சிவத்திரு. ப.தி.கு. தில்லை கோவிந்த செங்குந்த அவர்களுக்கு நூறு வயது நிறையும் நூற்றாண்டு விழாவினை சிறப்புற நிகழ்த்தும் டாக்டர் தில்லை ராஜ் நடராஜன் செங்குந்தர் அவர்களை நாட்டாண்மைத் தலைவராக பெற்றமை நாம் புரிந்த புண்ணியப் பேறே ஆகும்.

குடி செய்வல் என்னும் ஒருவற்கு தெய்வம்

மடிதற்றுத் தாம் முந்துறும்

திருவள்ளுவரின் பொய்யா மொழிக்கு ஏற்ப அவர்தம் அனைத்துப் பணிகளும் சிறந்து வாழ்வாங்கு வாழ்ந்திட வேட மங்கை வேழ மங்கையுடனாகிய ஸ்ரீ செல்வ முத்துக்குமரப் பெருமான் திருவருள் முன்னிற்குமாக

குமரகோட்டத்துக் குமரப்பெருமான் எழுந்தருள் புரியும் திருத்தல ஊர்த்தொகை

–குடந்தை கவிஞரேறு

சிவத்திரு அ.கண்ணப்பனார்

திருக்க டவூரும், பூந்துருத்தி

திருவேற் காடும், பெரியமடம்,

சிராப்பள் ளி,முட்டம், கற்குடியும்,

சீகாழி, ஆரூர், ரத்னகிரி

திருத்தில் லையுநல் அறுபதியும்

திருவா டானை, ஆனைக்கா,

திருப்புள் வேளூர், நெடியமலை

செந்தில், திருவா வினன்குடியும்,

திருப்பு னவாயில், ஏரகமும்,

திருவி ராமேச் சுரம், காசி,

திருக்கு டந்தை, சோலைமலை,

திருக்கண் டியூரும் மாயூரம்

பரங்குன் றம், கந் தனூர்,இந்தம்

பலமும் கொள்ளும் பேராளா

பழனித் தண்டாயுதபாணிப்

பரனே முருகப் பெருமானே

திருக்கடவூர் (திருக்கடையூர்), பூந்துருத்தி (திருப்பூந்துருத்தி), திருவேற்காடு, பெரியமடம், சிராப்பள்ளி (திருச்சி), முட்டம் (திருமுட்டம், ஸ்ரீமுஷ்ணம்) கற்குடி (உய்யக்கொண்டான் திருமலை), சீர்காழி, ஆரூர் (திருவாரூர்), ரத்னகிரி (ஐயர்மலை) திருத்தில்லை (சிதம்பரம்), அறுபது (ஆறு திருப்பதி), திருவாடானை (தேவகோட்டை அருகில்), ஆணைக்கா (திருவானைக்கோயில்), திருப்புள்வேளூர் (வைத்தீஸ்வரன் கோயில்),நெடிய மலை (நெடியம், திருத்தணிக்கு அருகில்), செந்தில் (திருச்செந்தூர்), திருவாவினன்குடி (பழனி அடிவாரம்) திருப்புனவாயில் ஏரகம், திருவிராமேம்சரம் (இராமேஸ்வரம்). காசி (வாரணாசி) திருக்குடந்தை (கும்பகோணம்), சோலைமலை (பழமுதிர்சோலை), திருக்கண்டியூர் (கண்டியூர்) திருவையாறு அருகில்), மாயூரம் (மயிலாடுதுறை), பரங்குன்றம் (திருப்பரங்குன்றம்) கந்தனூர் (புதுக்கோட்டை-பொன்னமராவதி வழியில்) இந்தம்பலம் ஆகிய திருத்தலங்களைத் தங்கியருளும்

இடமாகக் கொண்டுள்ள பெரும்புகழ் வாய்ந்தவரே பழனி தண்டாயுதபாணியாகிய மேலானவரே முருக பெருமானே அருள்புரிவீராக

கந்தன் குடியும், கயிலைமலை,

கடம்பந் துறையும், கருவூரும்,

காவி ரிப்பூம் பட்டினமும்,

கழுக்குன் றம்,சக் கரப்பள்ளி,

குன்றக் குடியும், கொல்லிமலை,

கொடுங்குன் றம், கூடலையாற்றூர்,

குற்றா லம், கூந் தலூர்பதியும்,

குடவா யில்,கொங் கணகிரியும்

செங்காட் டங்கு டியும்,சிக்கல்,

சிவபு ரம், சே லம், போரூர்

சிறுவா புரி,வே தாரணியம்,

திருவா னிகூடல், சத்திமுத்தம்,

பந்த ணைநல் லூர், துருத்தி,

பாகை நாக கிரிமேவும்

பழனித் தண்டாயுதபாணிப்

பரனே! முருகப் பெருமானே.

கந்தன்கடி (பேரளம் அருகில்), கயிலைமலை (திருக்கயிலாயம்), கடம்பந்துறை (குளித்தலை), கருவூர் (கரூர்), காவிரிப்பூம்பட்டினம் (பூம்புகார்) (வைப்புதலம்), கழுக்குன்றம் (திருக்கழுகுன்றம்), சக்கரப்பள்ளி (பாபநாசம் அருகில்), குன்றக்குடி (காரைக்குடி அருகில்), கொல்லிமலை (நாமக்கல் அருகில்), கொடுங்குன்றம் (பிரான்மலை (புதுக்கோட்டை அருகில்), கூடலையாற்றூர் (ஸ்ரீமுஷ்ணம் அருகில்), குற்றாலம் (திருக்குற்றாலம்), கூந்தலூர்பதி கூந்தலூர்) (நாச்சியார் கோயில் அருகில்), குடவாயில் (குடவாசல்), கொங்கணகிரி (வட்டமலை, (காங்கேயம் - தாராபுரம் சாலை), செங்காட்டங்குடி (திருச்செங்காட்டாங்குடி) (நன்னிலம் அருகில்), சிக்கல் (நாகபட்டினம் அருகில்), சிவபுரம் (கும்பகோணம் அருகில்), சேலம், போரூர் (திருப்போரூர்) (செங்கல்பட்டிற்கு அருகில்), சிறுவாபுரி ((சிறுவரம்பேடு) (பொன்னேரி அருகில்) வேதாரணியம், திருவானிகூடல் (பவானி (ஈரோடு அருகில்), சக்திமுற்றம் (திருச்சக்திமுத்தம்) பட்டீஸ்வரம் அருகில்), பந்தணை நல்லூர் (பந்தநல்லூர்) (மயிலாடுதுறை அருகில்), துருத்தி (குத்தாலம்) (மயிலாடுதுறை அருகில்) பாகை (பாகசாலை) நாககிரி (திருச்செங்கோடு ஆகிய திருத்தலங்களைத் தங்கியருளும்

இடமாகக் கொண்டுள்ள பெரும்புகழ் வாய்ந்தவரே பழனி தண்டாயுதபாணியாகிய மேலானவரே முருக பெருமானே அருள்புரிவீராக.

தஞ்சை அரத்து றைத்தலமும்

தணிகை வயலூர் கழுகுமலை

தான்தோன் றிமாடம் கனககிரி

தவத்து றையுடன் கரபுரமும்,

அண்ணா மலையும் அவிநாசி

அம்பர் குளந்தை ஆமாத்தூர்

அருக்கொ ணாம லையும்ஆமூர்

ஆலங் காடும் ஐயாறும்

சென்னி மலையும் ஊதிமலை

திலதைப் பதியும் திருஅதிகை

திருவேங் கடமுந் திருமலையும்

சிங்கைத் தலமுந் திரிபுவனம்

பன்னும் படிக்க ரையும், நாகை,

பனந்தாள், பெருந்து றையும்உறைவாய்

பழனித் தண்டாயுதபாணிப்

பரனே! முருகப் பெருமானே.

தஞ்சை (தஞ்சாவூர்), அரத்துறை (திருஅரத்துறை) (விருத்தாசலம் அருகில்) தணிகை (திருத்தணி), வயலூர் (திருச்சி அருகில்), கழுகுமலை (கோயில்பட்டி அருகில்) தான்தோன்றிமாடம் (ஆக்கூர்) (மயிலாடுதுறை அருகில்), கனககிரி (தேவிகாபுரம்) (போளூர் அருகில்), தவத்துறை (லால்குடி), கரபுரம் (திருப்பாற்கடல்), (சென்னை - வேலூர் வழியில் காவேரிப்பாக்கம் அருகில்), அண்ணாமலை (திருஅண்ணாமலை) அவிநாசி (திருப்பூர் அருகில்), அம்பர் (அம்பல்) (பூந்தோட்டம் அருகில்), குளந்தை (பெரியகுளம்), ஆமாத்தூர் (திருவாமாத்தூர்) (விழுப்புரம் அருகில்) அருக்கொணாமலை (கீரிமலை), (இலங்கையில் உள்ளது). ஆமூர் (திருவாமூர்) (பண்ருட்டி அருகில்), ஆலங்காடு (திருவாலங்காடு) ஐயாறு (திருவையாறு) சென்னிமலை (ஈரோடு அருகில்), ஊதிமலை (தாராபுரம் அருகில்) திலதைப்பதி (பூந்தோட்டம் அருகில்) திருஅதிகை (பண்ருட்டி அருகில்) திருவேங்கடம் (திருப்பதி), திருமலை (ஸ்ரீசைலம்), சிங்கை (காங்கேயம்) திரிபுவனம் (திருப்புவனம் கும்பகோணம் அருகில்), படிக்கரை (திருமண்ணிப்படிக்கரை இலுப்பைப்பட்டு) (வைத்தீஸ்வரன்கோயில் அருகில்), நாகை (நாகப்பட்டினம்), பனந்தாள் (திருப்பனந்தாள்), பெருந்துறை

(திருப்பெருந்துறை, ஆவுடையார்கோயில், அறந்தாங்கி அருகில்) ஆகிய தலங்களில் தங்கியருளுபவரே! பழனித் தண்டாயுதபாணியாகிய மேலானவரே! முருகப்பெருமானே! அருள்புரிவீராக!

வழுவூர், வளவா புரி.மதுரை,

வாஞ்சி யம்.சோ மீச்சரமும்,

வான்மி யூர்,கீர னூர்மயிலை

வலிதா யமுடன், மயேந்திரமும்,

வலிவ லம்,வக் கரை.மயிலம்,

மதுராந் தகத்து வடசிற்றம்

பலமும், விராலி மலை,ஒத்தூர்,

வடமுல் லைவா யிலும்,பேளூர்

விருத்தா சலம்,ஆ வடுதுறையும்,

விநாய கமலை, பெரும்புலியூர்

விற்கு டியும்,உத் திரமேரூர்,

வேலூர், மருத்து வக்குடியும்,

பழுவூர், திருப்பா திரிப்புலியூர்

பாண்டிக் கொடுமு டியும்வாழும்,

பழனித் தண்டாயுதபாணிப்

பரனே! முருகப் பெருமானே.

வழுவூர் (மயிலாடுதுறை அருகில்), வளவாபுரி (சேயூர்) (செய்யூர்) (மதுராந்தகத்திற்கு அருகில்), மதுரை : வாஞ்சியம் (ஸ்ரீவாஞ்சியம்) (நன்னிலம் அருகில்) சோமீச்சரம் (கும்பகோணம் சோமீசர் கோயில்). வான்மியூர் (திருவான்மியூர்) கீரனூர் (மயிலாடுதுறை - திருவாரூர் சாலையில்) மயிலை (மயிலாப்பூர்) (சென்னை), வலிதாயம் (பாடி) (சென்னை அருகில்), மயேந்திரம் (மயேந்திரப்பள்ளி) (சீர்காழி அருகில்) வலிவலம் (நாகப்பட்டினம் அருகில்), வக்கரை (திருவக்கரை) (புதுச்சேரி அருகில்) மயிலம் (திண்டிவனம் அருகில்), மதுராந்தகத்து வடசிற்றம்பலம் (புலிப்பரக்கோயில்) (மதுராந்தகம் - படாலம் அருகில்), விராலிமலை (திருச்சி அருகில்), ஒத்தூர் (திருவோத்தூர்) (செய்யாறு), வடமுல்லைவாயில் (திருமுல்லைவயில்) (மயிலாடுதுறை அருகில்), விநாயகமலை (பிள்ளையார்பட்டி), பெரும்புலியூர், (திருவையாறு அருகில்), விற்குடி (திருவாரூர் அருகில்), உத்திரமேரூர் (காஞ்சிபுரம் அருகில்), வேலூர் (இளையனார் வேலூர்), மருத்துவக்குடி (ஆடுதுறை அருகில்), பழுவூர் (கீழப்பழூர்) (அரியலூர் அருகில்), திருப்பாதிரிபுலியூர் (கடலூர் அருகில்),

பாண்டிக்கொடுமுடி (கொடுமுடி) (கரூர் அருகில்) ஆகிய தலங்களில் தங்கியருளுபவரே! பழனித் தண்டாயுதபாணியாகிய மேலானவரே! முருகப்பெருமானே! அருள்புரிவீராக

திருவார் உத்த ரகோசமங்கை

திருநள் ளாறு மாணிகுழி

திருவேட் களம்,மாந் துறை.ஒற்றி

திருப்ப ராய்த்து றையும்.இலஞ்சி.

குரவார் திருவி டைக்கழியும்

குரங்கா டுதுறை. மாகாளம்.

கோண மலையும். கோடிநகர்.

கொட்டை நகரும். கோசைநகர்.

நெருவூர். எட்டிக் குடி. எண்கண்.

நெடுங்க ளம்.நா கேச்சரமும்

நெய்த்தா னம்.நா வலூர்.நல்லூர்

நெல்வா யிலுஞ்சீர் இடைமருதூர்,

பழையா றையுடன் ஏழுதிருப்

பதியும் வதியும் குருபரனே

பழனித் தண்டாயுதபாணிப்

பரனே! முருகப் பெருமானே.

உத்தரகோசமங்கை (இராமநாதபுரம் அருகில்), திருநள்ளாறு (காரைக்கால் அருகில்), மாணிகுழி (திருமாணிக்குழி) (கடலூர் அருகில்) திருவேட்களம் (சிதம்பரம் அருகில்), மாந்துறை (திருமாந்துறை) (லால்குடி அருகில்), ஒற்றி (திருஒற்றியூர்) (சென்னை அருகில்), திருப்பராய்த்துறை, (திருச்சி அருகில்), இலஞ்சி திருக்குற்றாலம் அருகில்) திருவிடைக்கழி (தில்லையாடி அருகில்), குரங்காடுதுறை (ஆடுதுறை சிவன்கோயில்) (கும்பகோணம் அருகில்), மாகாளம் (கோயில் திருமாகாளம்) (பூந்தோட்டம் அருகில்) கோணமலை (திரிகோணமலை), (இலங்கையில்) கோடி நகர் (கோடிக்கரை - குழகர் கோயில்) (வேதாரண்யம் அருகில்), கொட்டை நகர் (கொட்டையூர்) (கும்பகோணம் அருகில்), கோசைநகர் (கோயம்பேடு) (சென்னை) , நெருவூர் (நெரூர்) (கரூர் அருகில்), எட்டிக்குடி (நாகப்பட்டினம் அருகில்), எண்கண் (திருவாரூர் அருகில்), நெடுங்களம் (திருநெடுங்களம்) நாகேச்சரம் (திருநாகேஸ்வரம்) (கும்பகோணம் அருகில்), நெய்த்தானம் (தில்லை ஸ்தானம்) (திருவையாறு அருகில்), நாவலூர்

(திருநாமநல்லூர்) (திருநாவலூர்) (பண்ருட்டி அருகில்) நல்லூர் (திருநல்லூர்) கும்பகோணம் பாபநாசம் அருகில், நெல்வாயில் (சிவபுரி) (சிதம்பரம் அருகில்) இடைமருதூர் (திருவிடைமருதூர்), (கும்பகோணம் அருகில்), பழையாறை (கும்பகோணம் பட்டீஸ்வரம் அருகில்), ஏழு திருப்பதி (சப்தஸ்தானம் - திருவையாறு) ஆகிய இடங்களில் தங்கி அருளும் குருபரனே! பழனி தண்டாயுதபாணியாகிய மேலானவரே! முருகப் பெருமானே! (அருப்புரிவீராக)

வெண்ணெய் நல்லூர், வடுகூரும்,

விஜய மாங்க லம்,துறையூர்

யாழ்ப்பா ணராயன் பட்டினமும்

வேப்பஞ் சத்தி, ஆய்க்குடியும்

தென்சே ரிகிரி, தீர்த்தகிரி

திரியம் பகபு ரம்,விசுவை

தேவ னூரும், நிம்பபுரம்

திருவள் ளியூர்,முள் வாய்,வல்லம்,

மன்னும் மாடைப் பதிமருகல்

மாயை, ராஜ புரம்,வாகை

மதுராந் தகம்,வா லிகொண்டபுரம்,

வயிர விவனம், தனிச்சயமும்

பன்னும் திருமு ருகன்பூண்டி

பாக்கம் கோடை நகர்பற்றும்

பழனித் தண்டாயுதபாணிப்

பரனே! முருகப் பெருமானே

வெண்ணெய்நல்லூர் (திருவெண்ணெய்நல்லூர்) வடுகூர் (திருவாண்டார்கோயில்), பாண்டிச்சேரி விழுப்புரம் பாதையில் விஜயமங்கலம் (ஈரோடு - திருப்பூர் பாதையில்), துறையூர் (திருத்துறையூர்) (விழுப்புரம் அருகில்), யாழ்ப்பாணராயன்பட்டினம் (இராசேந்திரன் பட்டினம்) (விருத்தாசலம் அருகில்), வேப்பஞ்சத்தி (வேப்பூர்) (விருத்தாசலம் அருகில்), ஆய்க்குடி (தென்காசி அருகில்) தென்சேரிகிரி (செஞ்சேரிமலை) (பல்லடம் - உடுமலைப்பேட்டை, பாதையில்), தீர்த்தகிரி (தீர்த்தமலை) (தருமபுரி - அரூர் வழி), திரியம்பகபுரம் (மதுரமாணிக்கம்) (குடவாசல் பெரும்பண்ணையூர் அருகில்), விசுவை (விசூர்) (உத்திரமேரூர் - மானம்பதி அருகில்), தேவனூர் (செஞ்சி - சேத்துப்பட்டு பாதை), நிம்பபுரம், வள்ளியூர் (நான்குநேரி அருகில்) முள்வாய் (அரக்கோணம் - திருவாலங்காடு பாதையில் உள்ள முள்வாய்ப்பாளையம்), வல்லம் (திருவலம்) (வேலூர் அருகில்), மாடைப்பதி (மாடையம்பதி) (மாடம்பாக்கம்) (தாம்பரம் -

நூத்தஞ்சேரி வழி), மருகல் (திருமருகல்) (வைப்புத்தலம்) (திருவாரூர் அருகில்), மாயை (மாயாபுரி) (ஹரித்துவார்) ராஜபுரம் (ராசிபுரம்) (சேலம் அருகில்), வாகை (வாகை மாநகர்) (திருவாளப்புத்தூர்) (வைத்தீஸ்வரன்கோயில் அருகில்), மதுராந்தகம் வாலிகொண்டபுரம் (பெரம்பலூர் அருகில்). வயிரவிவனம், தனிச்சயம், திருமுருகன்பூண்டி (அவிநாசி அருகில்). பாக்கம் (திருவண்ணாமலை கள்ளக்குறிச்சி வழியில் கடுவனூர்). கோடைநகர் (வல்லக்கோட்டை) (தாம்பரம் அருகில்) ஆகிய தலங்களைச் சேர்ந்திருந்து அருள்புரியும் பழனித் தண்டாயுதபாணியாகிய மேலானவரே முருகப்பெருமானே! அருள்புரிவீராக.

புருட மங்கை, எழுகரையும்,

பூம்ப றைஅத் திப்பட்டும்,

பூவா ளூர்,சோ மநாதமடம்,

பொதிகை, புகழி, வடதச்சூர்,

கரிய வனகர், கன்னபுரம்

காஞ்சி, விரிஞ்சை, வலஞ்சுழியும்

காமத் தூரும்வள்ளி மலை

காவ ளூர்,இஞ் சிக் குடியும்,

குருடி மலை,வெஞ் சமாக்கூடல்.

கொடும்பை, வடவி ஐயபுரமும்,

குறுக்கை, ஓடுக்கத் துச்செறிவாய்,

குறட்டி, வேப்பூர், வெள்ளிகரம்,

பரவும் பேறை, பெருங்குடியும்

பட்டா லியூரும் பதிகொண்டாய்,

பழனித் தண்டாயுதபாணிப்

பரனே! முருகப் பெருமானே

புருடமங்கை (நாங்குநேரி) எழுகரை (எழுகரைநாடு) பூம்பறை (பூம்பாறை) (கொடைக்கானலுக்கு அருகில்), அத்திப்பட்டு (வில்லுடையான்பட்டி (நெய்வேலி மின் உற்பத்தி நிலையம் அருகில்), பூவாளூர் (லால்குடி அருகில் சோமநாதமடம்; பொதிகை (பொதியமலை) (பாபநாசம்) புகழி (புகழிமலை (புகளூர்), (கரூர் அருகில்), வடதச்சூர் (கச்சூர் வடக்கு) (ஆண்டார்குப்பம் கரியவனகர் (கொண்டல்) (சீர்காழி - பனங்காட்டாங்குடி வழியில்), கன்னபுரம் (கரூர் - காங்கேயம் வழியில்) காஞ்சி (காஞ்சிபுரம்), விரிஞ்சை (விரிஞ்சபுரம்

(குடியாத்தம் அருகில்) வலஞ்சுழி (திருவலஞ்சுழி) (சுவாமிமலை அருகில்), காமத்தூர் (காமக்கூர்) ஆரணி படவேடுவழியில் பாளையம் அருகில்), வள்ளிமலை (வேலூர் அருகில்) காவளூர் (தஞ்சாவூர் - திருக்கருகாவூர் வழியில் நரியனூர் அருகில்). இஞ்சிக்குடி (பூந்தோட்டம் அருகில்). குருடிமலை (சின்னத்தடாகம்). வெஞ்சமாக்கூடல் (கரூர் அருகில்) கொடும்பை (கொடும்பூர், (கேரளாவில் பாலக்காட்டிற்கு அருகில்). வடவிஜயபுரம் (இந்திரசைலாத்திரி). குறுக்கை (திருக்குறுக்கை) (மயிலாடுதுறை அருகில்). ஒடுக்கத்தூர் செறிவாய் (ஒடுக்கத்தூர்) (வேலூர் அருகில்), குறட்டி (கொரட்டி) (திருப்பத்தூர் ஊத்தங்கரை வழி), வேப்பூர் (வேப்பூர்). வெள்ளிகரம் (திருத்தணி - பள்ளிப்பட்டு அருகில்). பேறை (பேறை நகர்) (பெறும்பேறு கண்டிகை) (விழுப்புரம் - செங்கல்பட்டு வழியில் தொழுப்பேடு அருகில்). பெருங்குடி (திருச்சி - வயலூர் - சோமரசம்பேட்டை அருகில்), பட்டாலியூர் (சிவன்மலை) (காங்கேயம் அருகில்) ஆகிய தலங்களை சிறப்பான பதிகளாகக் கொண்டவரே! பழனித் தண்டாயுதபாணியாகிய மேலானவரே! முருகப்பெருமானே! அருள்புரிவீராக.

திருக்கச் சூரும் கைச்சினமும்
திருவா தவூரும் கடம்பூரும்
செகநா தந்தண் டலைநெறியும்
திருவே டகம்நல் உறையூரும்
திருப்ப றியலூர் காளத்தி
திருநெல் வேலி சிவகாசி
திருக்க ளர்,அத் திக்கரையும்.
திருக்கோ வலூர்,வீ ழிம்மிழலை
திருப்பு றம்ப யம்,கண்டி
திருத்தே வூரும் மாதானை
சீர்ஞா னமலை தநுக்கோடி
திருப்புத் தூரும் வடமலையும்
பரக்க ருணையார் தமனியநல்
பதியும் அருளும் பரம்பரனே!
பழனித் தண்டா யுதபாணிப்
பரனே! முருகப் பெருமானே.

திருக்கச்சூர் (வைப்புத்தலம்) (செங்கல்பட்டு அருகில்), கைச்சினம் (வைப்புத்தலம்) (கச்சனம்) (திருத்துறைப்பூண்டி அருகில்). திருவாதவூர் (வைப்புத்தலம்) (மதுரை அருகில்). கடம்பூர் (காட்டுமன்னார்குடி அருகில்),

(மேலைக்கடம்பூர்), செகநாதம் (வைப்புத்தலம்), (ஓரிஸ்ஸாவில் பூரி ஜெகநாதம்) தண்டலைநெறி (தண்டலைச்சேரி) (திருத்துறைப்பூண்டி அருகில்), திருவேடகம் (வைப்புத்தலம்) (மதுரைசோழவந்தான் அருகில்), உறையூர் (வைப்புத்தலம்) (திருச்சி), திருப்பறியலூர் (வைப்புத்தலம்), (செம்பனார்கோயில் அருகில்), காளத்தி (காளஹஸ்தி), திருநெல்வேலி (வைப்புத்தலம்) சிவகாசி (வைப்புத்தலம்), திருக்களர் (வைப்புத்தலம்) (மன்னார்குடி அருகில்) அத்திக்கரை : திருக்கோவலூர் (திருக்கோயிலூர்), வீழிமிழலை (திருவீழிமிழலை) (பூந்தோட்டம் அருகில்), திருப்புறம்பயம் (வைப்புத்தலம்) (கும்பகோணம் அருகில்), கண்டி (வைப்புத்தலம்) (இலங்கையில்), திருத்தேவூர் (வைப்புத்தலம்) (தேவூர்), (நாகப்பட்டினம் அருகில்), மாதானை ஞானமலை (காவேரிபாக்கம் சோளிங்கர் வழியில்) தநுக்கோடி (வைப்புத்தலம்) (தனுஷ்கோடி) திருப்புத்தூர் (திருப்பத்தூர்) (புதுக்கோட்டை அருகில்) வடமலை (திருவேங்கடம்) தமனியப்பதி (பொன்னூர்) (மயிலாடுதுறை - நீடூர் அருகில்) ஆகிய தலங்களில் அருள்புரிபவரே! மேலானவர்களுக்கும் மேலானவரே பழனித் தண்டாயுதபாணியாகிய மேலானவரே! முருகப்பெருமானே! (அருள்புரிவீராக).

பழனி மலையான் பதம்பற்றப்
பணிகொண் டிருக்கும் இருள்நீங்கும்;
பழனி மலயான் பதம்பற்றப்
பாவம் போகும்; தேவையறும்;
பழனி மலையான் பதம்பற்றப்
பத்தி பதிக்கும்; சக்திவரும்;
பழனி மலையான் பதம்பற்றப்
பரவும் நலங்கள் பலவாகும்;
பழனி மலையான் பதம்பற்றப்
பாசப் பிணைப்பின் வாசம்அறும்;
பழனி மலையான் பதம்பற்றப்
பயில்வா தனைவிட்(டு) உயலாகும்;
பழனி மலையான் பதம்பற்றப்
பகைத்துன்(பு) எதுவும் இல்லையன்றோ?
பழனித் தண்டா யுதபாணிப்

பரனே! முருகப் பெருமானே.

பழனியாண்டவனின் திருப்பாதங்களைப் பற்றித் துதிப்பவர்களுக்கு உள்ளத்தைப் பணியாளாகக் கொண்டிருக்கின்ற அகந்தையாகிய இருள் நீங்கும்;

பாவம் போகும்

தேவை என்கின்ற நினைப்பு விலகும்.

பத்தியைப் பதித்து வைக்கும சக்தி கிடைக்கும்.

பரந்து விரிந்து செல்கின்ற நலங்கள் பல ஆகும்.

பாசத்தினால் ஏற்படுகின்ற கட்டுக்கள் விட்டுவிடும்.

வாதனைகளை ஒதுக்கிவிட்டு முன்னேறுதல் நடைபெறும்.

பகையால் ஏற்படக்கூடிய துன்பங்கள் இல்லை அல்லவா?

(என்று பரவுகின்றேன்)

பழனித் தண்டாயுதபாணியாகிய மேலானவரே! முருகப்பெருமானே! அருள்புரிவீராக.

<u>தத்துவ துணுக்குகள்</u>

கடவுள் வாழ்க்கைக்கு (பக்தர்கள்)

வாழ்க்கை கடவுளுக்கு (ஞானிகள்)

விஞ்ஞானம் அறிவிற்கு தகவல்

ஞானம் உள்ளத்திற்கு மாற்றம்

ஆன்மீக வளர்ச்சியின் அளவுகோல்

கோபம், பெருமை, பேராசை போன்ற

மனத்தை கலக்கும் எண்ணங்கள்,

வரும் சமயங்கள் குறைவது,

தீவிரம் அடங்குவது

மீட்சி விரைவாகுவது

சிதம்பரம் ஸ்ரீ செல்லியம்மன் கோயில் கேணி மடத்துப் பட்டி மண்டபம்.

இரா.நடராஜன் M.B.A, அறங்காவலர் செல்லியம்மன் கோயில்

"பட்டி மண்டபம் பாங்கறிந்து ஏறுமின்"
"எட்டினோடு இரண்டும் அறியேனைப்
பட்டிமண்டபம் ஏற்றினை ஏற்றினை"

என்பனவாகிய இலக்கியப் பாடலடிகள் பட்டிமண்டபம் பண்டைநாளில் ஓர் அறிவாதிக்க ஆய்வுக் களமாக விளங்கியது என்பதைத் தெரிவிக்கின்றன.

இக்காலத்துப் பட்டிமண்டபங்கள் வெறும் வெட்டி மண்டபங்களாகப் போய்விட்டன. கிண்டலும், கேலியும் பொறுப்பற்ற நகைச்சுவையும் நிறைந்து பொழுது போக்கு ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டதால் தரம் குறைந்துவிட்டன. ஆனால் பண்டைக் காலத்துப் பட்டி மண்டபங்களில் சமய தத்துவ வாதங்களைச் சான்றோர் கூடிய அவையில் அறிவார்ந்த நன்மக்கள் நிகழ்த்தினர். மணிமேகலைக் காப்பியத்துச் சமயக் கணக்கர் தம் திறம் கேட்ட காதை, மணிவாசகரின் திருச்சாழல் போன்றவற்றை இதற்கு எடுத்துக்காட்டாகக் கருதலாம்.

18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் இந்தியச் சமயங்களுக்கும், இறக்குமதி செய்யப்பட்ட சமயங்களுக்கும் இடையே தத்துவ அடிப்படையில் வாதங்கள் நிகழ்ந்தன. மத மாற்றங்களும் நடந்தன. அப்படி ஒரு சமயவாதம் சிதம்பரம் ஸ்ரீ செல்லியம்மன் கோயிலையடுத்த கேணி மடத்தில் நிகழ்ந்தது.

சித்தாந்த சைவநெறிக்கான விளக்கங்களை யாழ்ப்பாணம் நல்லூர் தவத்திரு ஆறுமுக நாவலர் முன்வைத்தார். இவர் சைவத்தையும் தமிழையும் தம்மிரு கண்களெனப் போற்றியவர். இலக்கண இலக்கியங்களுக்கு வசன நடையில் விளக்கம் தந்தவர். இவருக்கு திருவாவடுதுறை ஆதினம் நாவலர் எனப் பட்டமளித்துப் போற்றியது. வசனநடை கை வந்த வல்லாளர்

என இவர் தமிழறிஞர்களால் பாராட்டப பெற்றார். இவர் சிதம்பரத்தில் நிறுவிய சைவப்பிரகாச வித்யசாலை இன்று ஆறுமுகநாவலர் மேல்நிலைப்பள்ளியாக விளங்கி கல்விப் பயிர் செழிக்கச் செய்கிறது.

தவத்திரு ஆறுமுக நாவலருக்கும் கத்தோலிக்கமத பரப்புனர் பெரியவர் கரோல் விசுவநாதருக்கும் இடையே சமயவாதம் நிகழ்ந்தது. கரோல் விசுவநாதர் தத்துவ வாதம் செய்வதைவிடுத்து, புராணக் கதைகளை வைத்துச் சைவத்தைத் தூற்றினார். இறையருளாலும் தம் ஆதாரத்தோடு கூடிய பேச்சாற்றலாலும் சைவ சமயமே மெய்ச்சமயம் என்பதை நாவலர் நிலை நாட்டினார். சைவத்தைப் பழித்த கரோல் விசுவநாதர் தம்முடைய நாக்கை பொன்னூசி சுடுவித்துச் சூடு போட்டுக் கொண்டார். சைவ நெறிக்குத் திரும்பினார்.

இந்தப் பட்டிமண்டபம் பொதுமக்கள் நிறைந்த சபையில் செங்குந்தமரபினர் முன்னிலையில் சிதம்பரம் ஸ்ரீ செல்லியம்மன் கோயிலை அடுத்த கேணிமடத்தில் நிகழ்ந்தது.

இதனை வரலாற்று ஆசிரியர் சோம.லெ அவர்கள் தம் நமது தமிழ்நாடு என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.


சோம.லெ
நமது தமிழ்நாடு – (6)
தென் – ஆர்க்காடு மாவட்டம்
வெளியீடு – பாரிநிலையம், சென்னை.
முதற்பதிப்பு – 1963 – பிப்ரவரி
பக்.320

<u>தத்துவ துணுக்குகள்</u>

பிராத்திப்பது உங்கள் கடமை

அருள் வழங்குவது கடவுளின் கருணை

மே. 1978 – அமெரிக்கா – டல்லஸ் நகரம்
தம் திருமகனார் வளமனையில் தம்பதி சமேதராய்
பெயரக் குழந்தை கார்த்திக்குடன் மகிழ்ந்திருத்தல்








ஹில்டன் நகர் நாசா ஏவுகணை
தளத்தைக் கண்டு வியத்தல்



கொலரெடா டன்வர் நகரத்தின் அருகே 14000
அடி உயர மலைச்சிகர இரயில் பயணம்




நாட்டாண்மைத் தலைவர் திருமிகு.P.T.K.T.அவர்கள்சபாநாயகர் கோவில் செயலாளர் பிரம்மஸ்ரீ நடராஜ தீட்சிதர் அவர்களுடன்செங்குந்த நவவீரர் ஊர்வலத்தில் வலம் வந்த பெருமிதத் தோற்றம்



விவாக சுப முகூர்த்தப் பத்திரிகை.

இங்ஙனம்,
க. முருகேச முதலியார்.

சிதம்பரம்
2—6—1945



MIRASDAR, CHIDAMBARAM

requests the pleasure of your company
with family and friends
on the occasion of the marriage of his
brother-in-law

Chi. P. T. K. Thillaigovindan

AND

Sow. Vasantha

on 23 - 6 - 45 between 6 & 7 a. m.
at the bridegroom's residence
No. 5, Bava Mudali Street,
Chidambaram

With the best compliments of:-

தங்க கிரீடங்கள் மற்றும் புஜ கவசங்கள், பரம்பரை பரம்பரையாக சிதம்பரம் செங்குந்த நவவீரர்கள் அணிந்து வருவது..

#சிதம்பரம் #chidambaram #kaikolar





உ
ஸ்ரீ செல்வ விநாயகர் துணை
திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் சமேத
ஸ்ரீ நடராஜப் பெருமான் கோயில்

மார்கழி ஆருத்ரா தரிசனப் பெருவிழா

சிதம்பரம் வடபகுதி செங்குந்தர் பொதுவினர் நிகழ்த்தும்

கொடியேற்ற உற்சவ அழைப்பிதழ்






அன்புடையீர் !

நிகழும் சுபகிருது வருடம் மார்கழி மாதம் 13-ஆம் நாள் (28.12.2022) புதன்கிழமை காலை 6.00 மணிக்கு மேல் 7.30 மணிக்குள் தனுர் லக்னத்தில், ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமான் கோயில் ஆருத்ரா தரிசன கொடியேற்ற உற்சவம் நடைபெறும். மார்கழி மாதம் 21-ஆம் நாள் (05.01.2023) வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும், மார்கழி மாதம் 22-ஆம் நாள் (06.01.2023) வெள்ளிக்கிழமை, மார்கழித் திருவாதிரை மகாபிஷேகமும், ஆருத்ரா தரிசனமும் நடைபெறும். கொடியேற்ற உற்சவத்தில் அனைவரும் கலந்து கொண்டு சிற்றம்பலத்துச் செல்வப்பெருமான் திருவருள் பெற வேண்டுகிறோம்.

நிர்வாகிகள் :

R. **வேல்முருகன், செங்குந்தர்,** உபதலைவர்
A. **ராமலிங்கம் செங்குந்தர்,** பொருளாளர்
S. **சந்திரசேகரன் செங்குந்தர்,** மணியம்
V. **மாரிமுத்து செங்குந்தர்,** உதவி மணியம்

இப்படிக்கு
P. **அண்ணாமலை செங்குந்தர்**
நாட்டாண்மைத் தலைவர்
வடபகுதி செங்குந்தர் பொது
சிதம்பரம்.

நிர்வாகக்குழு உறுப்பினர்கள் :

S. சிதம்பர நடராசன்
P. முருகன்
K. ராஜா
U. வைத்தியநாதன்
R. திருமுருகன்

G. ராமகிருஷ்ணன்
S. ரவி
K. பாலு
துரை (எ) S. கலியபெருமாள்
K. திருநாவுக்கரசு

R. சண்முகம்
N. இளங்கோவன்
V. முத்து
K. முத்து
S. குணசேகரன்

மற்றும் **வடபகுதி செங்குந்தர் மரபினர்**
கட்டளை தீக்ஷிதர். ஸ்ரீ.V. **பதஞ்சலி சோமநாத தீக்ஷிதர்**



உ

திருச்சிற்றம்பலம்

சிதம்பரம் ஸ்ரீ சிவகாமியம்மை உடனாகிய சிற்றம்பலத்துச் செல்வப் பெருமான் ஸ்ரீசோபகிருது ஆண்டு ஆனித் திருமஞ்சன

கொடியேற்ற உற்சவம் அழைப்பிதழ்

ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடம்; ஒன்று மேலிடில் ஒன்று
ஒளிக்கும், எனினும் இருள் அடராது; உள்ளுயிர்கு (உ)யிராய்த்
தெளிக்கும்; அறிவு; நிதழ்ந்துளதேனும் திரிமலத்தே
குளிக்கும்; உயிர்; அருள் கூடும்படி கொடி கட்டினனே!

– சந்தானகுரவர் உமாபதிசிவம்

அன்புடையீர்!

தமிழகத்தின் அனைத்து சிவாலயங்களிலும் முருகப்பெருமான் திருக்கோயில்களிலும் கொடியேற்ற உற்சவம், தொன்றுதொட்டு செங்குந்த மரபினரால் நிகழ்த்தப் பெற்று வருகின்றது.

சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருக்கோயிலில் ஆண்டுக்கு இருமுறை பிரம்மோற்சவம் நிகழ்கின்றது. ஒன்று ஆனித் திருமஞ்சன உற்சவம், மற்றொன்று மார்கழித் திருவாதிரை உற்சவம் ஆகும்.

இவற்றுள் ஆனி உத்திர உற்சவக் கொடியேற்றம் சிதம்பரம், தென்பகுதி செங்குந்த மரபினராலும், மார்கழித் திருவாதிரை உற்சவக் கொடியேற்றம் சிதம்பரம் வடபகுதி செங்குந்த மரபினராலும் நிகழ்த்தப் பெறுகின்றது.

பாரம்பரியமாக நடந்து வரும் இம்மரபுப்படி ஸ்ரீ சோபகிருது ஆண்டு ஆனி உத்திர பெரிய திருவிழாக் கொடியேற்ற உற்சவம், ஆனி மாதம் 02–ஆம் நாள் **(17.06.2023) சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு மேல் 9.00 மணிக்குள் கடக லக்னத்தில்** நடைபெறும். இக்கொடியேற்ற உற்சவத்தில் **25.06.2023 - ஞாயிற்றுக்கிழமை** நிகழும் **திருத்தேர் விழாவிலும், 26.06.2023** - திங்கள்கிழமை நிகழும் **ஆனித் திருமஞ்சன மகா தரிசன விழாவிலும்** நம் சொந்தங்களாகிய செங்குந்த மரபினர் அனைவரும் பங்கேற்று அம்மை அம்பலவாணர் திருவருள் பெற்றிடக் கோருகிறோம்.



ஸ்ரீ சபாநாயகர் கோயில் **துவஜ படனம்**

அன்புடன் ...

தில்லை ராஜ் நடராஜன் செங்குந்தர்

சிதம்பரம் தெற்குத் தெரு செங்குந்தர் பரம்பரை

நாட்டாண்மைத் தலைவர் & டிரஸ்டி

நெ.5/5, பாவா முதலியார் தெரு,

சிதம்பரம்.

உற்சவ விவரங்கள் பின்பக்கம் பார்க்கவும்

சிதம்பரம் – 14.06.2023

உ

திருச்சிற்றம்பலம்



பேரன்புடையீர்!

சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருக்கோயில் மேலைக் கோபுர வாயிலில் அமைந்துள்ள, ஸ்ரீ வள்ளி தேவசேனா உடனாகிய ஸ்ரீ முத்துக்குமரப் பெருமான் கோயிலில், குரோதி வருடம், கந்த சஷ்டி சூரசம்ஹார உற்சவம் **02.11.2024 சனிக்கிழமை முதல் 08.11.2024 - வெள்ளிக்கிழமை** வரை நிகழ்ச்சி நிரலில் கண்ணுறும் வண்ணம் சிறப்புற நிகழும். மெய்யன்பர்கள் அனைவரும் வருகைதந்து ஸ்ரீ வள்ளிதேவசேனா உடனாகிய செல்வமுத்துக்குமரப் பெருமான் திருவருள் பெற்றிடக் கோருகிறோம்.

இங்ஙனம்

செயலாளர்
ஸ்ரீ சபாநாயகர் கோயில்
பொது தீக்ஷிதர்கள்
சிதம்பரம்

தில்லை ராஜ் நடராஜன் செங்குந்தர்
சிதம்பரம் தெற்குத் தெரு,
செங்குந்தர் பரம்பரை
நாட்டாண்மைத் தலைவர் & டிரஸ்டி

பிரும்மஸ்ரீ. **R.ஷண்முகசுந்தர தீக்ஷிதர்**
சிதம்பரம் தென்பகுதி செங்குந்தர்
கட்டளை தீக்ஷிதர்

மற்றும்
செங்குந்த மரபினர்
சிதம்பரம்

<u>செங்குந்த நவ வீரர்கள்</u>



வீரதீரர் வீராந்தகர் வீரமார்த்தாண்டர் வீரராக்கதர் வீரவாகுதேவர் வீரகேசரி வீரமகேந்திரர் வீரமகேச்சுரர் வீரபுரந்தரர்



சிதம்பரம், மன்னார்குடி சாலைத் தெரு, செங்குந்தம் பிள்ளையார்கோயில்

சிறுத்தொண்ட நாயனார் திருவமுது படையல்

104-ஆம் ஆண்டு மஹோத்சவப் பத்திரிகை

" செங்காட்டங்குடிமேய சிறுத்தொண்டற் கடியேன் " — சுந்தரர்

பல்குமருத் துவரதிபர் செங்காட்டங் குடிவாழ்
    படைத்தலைவ ரமுதளிக்கும் பரஞ்சோதி யார்மெய்ச்
செல்வமிகு சிறுத்தொண்டர் காழி நாடன்
    திருவருள் சேர்ந் தவர் வளருஞ் சீராளன் றன்னை
நல்குதிரு வெண்காட்டு நங்கை சமைத் திடப்பின்
    னன்மதிச்சந் தனத்தாதி தலைக்கறியிட் டுதவப்
புல்கவரும் வயிரவர்தா மகிழ்ந்து மகவருளப்
    போற்றியவர் வெனருளே பொருந்தினாரே.

அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி அருளோடு விளங்கித் தோன்றும் சிற்றம் பலத்துச் செல்வப்பெருமான், தம்முடைய அடியவருள் ஒருவராகிய சிறுத்தொண்ட நாயனார் பசிப்பிணி போக்கும் அறப்பணி புரிந்து சிவநெறி நிற்கும் மேன்மையை உலகறியச் செய்திடத் திருவுளங்கொண்டார். பரஞ்சோதியாராகிய சிறுத்தொண்டரும் அவர்தம் மனைவியாராகிய திருவெண்காட்டு நங்கையும், பணிபுரியும் ஏவல் பெண்ணாகிய சந்தனத் தாதியாரும் பக்தி வைராக்கிய விசித்திர உள்ளத்தவராய் சிவனடியார்கட்கு அவர்கள் விரும்பிய உணவைத்தந்து உபசரித்து வருதலைச் சிறந்த தொண்டாகக் கைக்கொண்டிருந்தனர். தொண்டரை விளக்கங்காண்பவராகிய சிவபெருமான் பைரவ சந்நியாசியாகத் திருவேடங்கொண்டு திருச்செங்காட்டங்குடிக்கு வந்து மகவுக்கறி அன்னமோடு அளிக்குமாறு கேட்டார். அதற்கு உடன்பட்ட சிறுதொண்டரும் தம் ஒரே மகனாகிய சீராளதேவரை அரிந்து பாகஞ்செய்து பைரவருக்குப் படையல் செய்தார். செயற்கரிய இந்த அருஞ்செயலைப் போற்றிய சிவபெருமான் சீராளதேவரை உயிர்ப்பித்து மலையமந்த தையலோடும் சரவணத்துத் தனையரோடும் இடபாரூடராய்க் காட்சிதந்து அருளினார். இந்த அருள்வரலாறு சிவனடியார்க்கு **அன்னம்பாலிக்கும் உயர்ந்த தொண்டின் மேன்மையை உணர்த்துகின்றது.**

சிறுத்தொண்டநாயனார் குருபூசை ஆண்டுதோறும் அமுது படையல் திருவிழாவாகத் தமிழக மெங்கும் நடைபெற்று வருகின்றது.

இத்திருவிழா நிகழும் சோபகிருது வருடம் சித்திரை மாதம் 8-ஆம் தேதி (21.4.2023) வெள்ளிக்கிழமை சிதம்பரம் சபாநாயகர் வீதி அழகானந்தம் சி.கனகசபை முதலியார் சத்திரத்தில் நிகழ் முறையில் கண்ணுறும் வண்ணம் பக்திபூர்வமாய் நடைபெறும். மெய்யன்பர்கள் அனைவரும் இப்பெரும் அமுதுபடையல் கைங்கர்யத்தில் பங்கேற்றுத் திருவருளையும் குருவருளையும் பெற்றுச் சிறந்திட வேண்டுகின்றோம்.

இங்ஙனம் தொண்டரடி பரவுவார் தம் அடியார்
செங்குந்த சிவபக்தர்கள் மற்றும் சிவனருள் தொண்டர்கள்
மன்னார்குடித் தெரு, சிதம்பரம்.

சிதம்பரம். சபாநாயகர் தெரு, அழகாந்தம் சி.கனகசபை முதலியார் சத்திரம்

நிகழ்முறை :

நாள் : 21.4.2023 வெள்ளிக்கிழமை (சோபகிருது வருடம் சித்திரை - 8) சித்திரை பரணி நட்சத்திரம்

நேரம் : காலை 9.00 மணி பைரவ பிட்சாடனமூர்த்தி எழுந்தருளுதல்

மதியம் 1.00 மணி சீராளதேவரை அரிந்து பாகஞ்செய்து அமுதுபடையல் செய்தலும் மகாதீபாராதனையும்.

மதியம் 1.30 மணி சிவனடியார்களுக்கு அமுது படைத்து மாகேஸ்வர பூசை செய்தல்

குறிப்பு :

சிதம்பரம், சபாநாயகர் தெரு, அழகானந்தம் கனகசபை முதலியார் சத்திரம்
ஸ்ரீ உத்திராபதியார் சிறுத்தொண்டர் அமுதுபடையல் திருத்தொண்டின் தருமத்திற்கு மயில் காவடிகள் வாடகைக்கு விடப்படும்.

என்றும் இறைபணியில் உங்கள் அருள் அகோரம்

A. & Co. Series 2.

சிதம்பர - -
- - ரகசியம்.

அருணகிரி அண்டு கம்பெனி,

தபால் பெட்டி 377,

...ண்ட் ரோட் :: சென்னை.

வரையில் செங்குந்த மரபினர்களே கொடியேற்று விழாவை நடத்தி வருகின்றார்கள். இதற்காக நாட்டிலுள்ள செங்குந்தத் தலைவர்கள் ஸ்ரீ நடராஜப்பெருமான் மீது தரிக்கு இவ்வளவு என்று வரி விதித்து சிதம்பரத்திலுள்ள செங்குந்தத் தலைவர்களாகிய நாட்டாண்மைக்காரர்களுக்கு அனுப்பி வருகின்றார்கள். நாளது வரையில் சிதம்பரத்தில் கொடி. யேற்று விழா செங்குந்தர்களின் உற்சவமாக நடைபெற்று வருகின்றது.

ஸ்ரீ நடராஜர் ஆலயத்திற்குள் எவரும் மேளவாத்தியங்களுடனும் விருதுகளுடனும் பிரவேசிக்க இன்றும் தீட்சதர்கள் அனுமதிக்க மாட்டார்கள். எத்தகைய செல்வந்தர்கட்கும் அத்தகைய வரவேற்பு கிடையாது. ஆனால் கொடியேற்று விழாவை நடத்திவைக்கும் செங்குந்தர்கள் மட்டில் சூரசம்மாரத்தன்று நவவீரர் வேடம் தரித்துச் சகல விருதுகளுடன் தமது இனத்தார் புடை சூழ மேளவாத்திய கோஷத்துடன் ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு எதிர் முகமாகத் தெற்கு சன்னதி வழியாக ஆலயத்தில் பிரவேசிக்கலாம். இந்த விசேஷ உரிமை செங்குத்தர்களுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டிருக்கின்றது. இது மாமூல் வழக்கமாக இன்றும் செங்குந்தர்களால் அநுசரிக்கப்பட்டு வருகின்றது.

1930 ஆம் ஆண்டு சிதம்பர ரகசியம் புத்தகத்தில் செங்குந்த முதலியார் உரிமைகள் பற்றி உள்ள வரிகள்

உ

வேலும் மயிலும் துணை

துந்துபி ஆண்டு கார்த்திகைத் திங்கள் ஆறாம் நாள் திங்கட்கிழமை (22.11.1982)

அருள்மிகு சபாநாயகர் திருக்கோயில்

வேதத்தோன் முதலாகிய தேவர்கள் பூஜித்தே தொழ புலியூரினில் மேலைக்கோபுர வாசலில் எழுந்தருளியுள்ள அருள்மிகு குமரப் பெருமான் வள்ளி தேவசேனா உடனாகும் பொருட்டு திருக்கல்யாணம் கொண்டருளும் திருநாளாகும். அன்று காலை சிற்றம்பலத்தெங்கள் செல்வப் பெருமான் திருவருளால்
நமது செங்குந்தர் பரம்பரையின் வாழையடி வாழையென வந்த மரபின்படி
சிதம்பரம் தெற்குத்தெரு செங்குந்தர் குலத்தின் பரம்பரை நாட்டாண்மை

திருமிகு. **ப.தி.கு. தில்லைக்கோவிந்த முதலியார்** அவர்களின்

திருமகனார் நிறைநாட்செல்வர்

திருமிகு. தி. நடராஜ முதலியார் அவர்கள்


சிதம்பரம் தெற்குத்தெரு செங்குந்தர் நாட்டாண்மைக்கு இளவரசராகப் பட்டமேற்கின்றார்கள் அருள்மிகு சபாநாயகர் சந்நதியில் பஞ்சாட்சரத் திருக்களிற்றுப்படியில் அமர்த்தி அன்னாருக்கு தில்லை வாழந்தணர்கள் சங்காபிஷேகம் செய்வித்து இளவரசுப்பட்டம் சூட்டிய ஞான்று **சிதம்பரம் செங்குந்த மரபினர்கள் மனமொழி மெய்களால் ஆசி வழங்கி வாழ்த்திய**

பட்டாபிஷேக வாழ்த்திதழ்

பொன்பெரிது	பொலிக!	நெல்பெரிது	சிறக்க!
பொன்னம்	பலத்துக்	கூத்துடை	வள்ளல்
இன்னருள்	நலத்தால்	இனியவை	மலர்க!
அணிமயி	லமரும்	ஆறுமுகச்	செவ்வேள்
அருகினி	லுறையும்	ஆற்றலஞ்	செல்வர்
வீரவாகுவாம்	பெரும்	பெயர்	நல்லோர்
தோன்றிய	நற்குடி	துகளறு	பெருங்குடி
குந்தமும்	புலியும்	சேவலும்	பொறித்த
வெற்றித்	துவசம்	உயர்த்திய	திருக்குடி
திருவளர்	தில்லைக்	கோவிந்த	முதலியார்
பெருமைத்	தலைமையில்	பொலியும்	பெருங்குடி
செங்குந்தம்	என்னும்	நற்குடி	வாழிய!
தில்லைக்	**கோவிந்த**	**முதலியார்**	குமாரர்
அயற்புலக்	கல்வி	மயக்கறத்	தெளிந்த
நடராச	**முதலியார்**	நன்றே	வாழிய!
அம்பலக்	கூத்தர்	அருட்டிரு	முன்னர்
பஞ்சாட்சர	மெனும்	வெள்ளியம்	படியில்
சங்காபி	டேகம்	கொண்டினி	திருக்கும்
எங்கள்	குலத்தின்	ஏரார்	செம்மால்
சோழர்தம்	குடிக்கு	திருமுடி	சூட்டும்
பொற்புடை	அந்தணர்	நுந்தமக்	கின்று
சங்காபி	டேகம்	செய்தனர்	வாழி!
ஆண்டுபல்	லாண்டுகள்	அவனியிற்	சிறந்து
பிறந்த	குலத்தின்	பெருமையை	உயர்த்தி
வாழிய	**இனிது!**	வாழிய	**இனிதே!**



குமரக்கடவுளின் தம்பியர் போர்ப்படைத் தளபதிகள்
செங்குந்த நவவீரர்கள்



ஸ்ரீ கோவிந்தராஜ பெருமாள் கோயில், திருச்சித்ரகூடத்து ராஜகோபுரம்



செங்குந்த மரபினர் கட்டிய சிவதருமக் காவிக் கொடி
பட்டொளி வீசிப்பறக்கும் தெற்கு ராஜகோபுரம்